*புதுச்சேரி அரசு*
*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **28 ஜூலை, 2021**

## பத்திரிகை செய்தி

புதுச்சேரியில் கொரோனா பெருந்தொற்றுப் பரவலை முற்றிலுமாகக் கட்டுப்படுத்த அரசு மேற்கொண்டு வரும் தொடர் முயற்சிகளுக்கு பல்வேறு அரசு-சாரா நிறுவனங்கள் உதவி புரிந்து வருகின்றன. அதன் தொடர்ச்சியாக தனியார் பொறுப்புணர்ச்சித் திட்டத்தின்கீழ், புதுச்சேரி பியுரோ டைனமிக்ஸ் நிறுவனம் ரோட்டரி கிளப் ஆப் பாண்டிச்சேரி மூலமாக ரூ. 2.16 லட்சம் மதிப்பிலான 12 பிராணவாயு சிலிண்டர்களை வழங்கியுள்ளது. துணைநிலை ஆளுநர் மாளிகையில் இன்று (28-07-2021) நடைபெற்ற நிகழ்ச்சியில் துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் முன்னிலையில் இவை சுகாதாரத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டன. சுகாதாரத்துறைச் செயலர் டாக்டர் அருண் சிலின்டர்களைப் பெற்றுக் கொண்டார்.

நிகழ்ச்சியின்போது துணைநிலை ஆளுநரின் செயலர் திரு அபிஜித் விஜய் சௌதரி, மாநில சுகாதார இயக்கத் திட்ட இயக்குநர் டாக்டர் ஸ்ரீராமலு மற்றும் ரோட்டரி சங்க அதிகாரிகள் உடனிருந்தனர்.